## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## நான்காம் பத்து

### பத்தாம் திருமொழி - ஆய்ச்சியர்
### திருவெள்ளியங்குடி

** ஆய்ச்சியர் அழைப்ப வெண்ணெய் உண்டு ஒருகால் *
ஆலிலை வளர்ந்த எம்பெருமான் *
பேய்ச்சியை முலை உண்டு இணை மருது இறுத்துப் *
பெருநிலம் அளந்தவன் கோயில் **
காய்த்த நீள் கமுகும் கதலியும் தெங்கும் *
எங்கும் மாம்பொழில்களின் நடுவே *
வாய்த்த நீர் பாயும் மண்ணியின் தென்பால் *
திருவெள்ளியங்குடி அதுவே 1

ஆநிரை மேய்த்து அன்று அலைகடல் அடைத்திட்டு *
அரக்கர் தம் சிரங்களை உருட்டி *
கார் நிறை மேகம் கலந்ததோர் உருவக் *
கண்ணனார் கருதிய கோயில் **
பூ நிரைச் செருந்தி புன்னை முத்தரும்பிப் *
பொதும்பிடை வரிவண்டு மிண்டி *
தேன் இரைத்து உண்டு அங்கு இன்னிசை முரலும் *
திருவெள்ளியங்குடி அதுவே 2

கடு விடம் உடைய காளியன் தடத்தைக் *
கலக்கி முன் அலக்கழித்து * அவன் தன்
படம் இறப் பாய்ந்து பல் மணி சிந்தப் *
பல் நடம் பயின்றவன் கோயில் **
படவரவு அல்குல் பாவை நல்லார்கள் *
பயிற்றிய நாடகத்து ஒலி போய் *
அடை புடை தழுவி அண்டம் நின்று அதிரும் *
திருவெள்ளியங்குடி அதுவே 3

கறவை முன் காத்துக் கஞ்சனைக் காய்ந்த *
காளமேகத் திரு உருவன் *
பறவை முன் உயர்த்துப் பாற்கடல் துயின்ற *
பரமனார் பள்ளி கொள் கோயில் **
துறை துறை தோறும் பொன்மணி சிதறும் *
தொகுதிரை மண்ணியின் தென்பால் *
செறிமணி மாடக் கொடி கதிர் அணவும் *
திருவெள்ளியங்குடி அதுவே 4

பாரினை உண்டு பாரினை உமிழ்ந்து *
பாரதம் கை எறிந்து * ஒருகால்
தேரினை ஊர்ந்து தேரினைத் துரந்த *
செங்கண்மால் சென்று உறை கோயில் **
ஏர் நிரை வயலுள் வாளைகள் மறுகி *
எமக்கிடம் அன்று இது என்று எண்ணி *
சீர் மலி பொய்கை சென்று அணைகின்ற *
திருவெள்ளியங்குடி அதுவே 5

காற்றிடைப் பூளை கரந்தன அரந்தை
உறக் * கடல் அரக்கர் தம் சேனை *
கூற்றிடைச் செல்லக் கொடுங்கணை துரந்த *
கோலவில்லி இராமன் தன் கோயில் **
ஊற்றிடை நின்ற வாழையின் கனிகள் *
ஊழ்த்து வீழ்ந்தன உண்டு மண்டி *
சேற்றிடைக் கயல்கள் உகள் திகழ் வயல் சூழ் *
திருவெள்ளியங்குடி அதுவே 6

ஒள்ளிய கருமம் செய்வன் என்று உணர்ந்த *
மாவலி வேள்வியில் புக்கு *
தெள்ளிய குறளாய் மூவடி கொண்டு *
திக்குற வளர்ந்தவன் கோயில் **
அள்ளி அம்பொழில்வாய் இருந்து வாழ் குயில்கள் *
அரி அரி என்றவை அழைப்ப *
வெள்ளியார் வணங்க விரைந்து அருள் செய்வான் *
திருவெள்ளியங்குடி அதுவே 7

முடி உடை அமரர்க்கு இடர் செய்யும் *
அசுரர் தம் பெருமானை * அன்று அரியாய்
மடி இடை வைத்து மார்வை முன் கீண்ட *
மாயனார் மன்னிய கோயில் **
படி இடை மாடத்து அடியிடைத் தூணில் *
பதித்த பன்மணிகளின் ஒளியால் *
விடி பகல் இரவென்று அறிவரிதாய *
திருவெள்ளியங்குடி அதுவே 8

குடி குடியாகக் கூடி நின்று அமரர் *
குணங்களே பிதற்றி நின்று ஏத்த *
அடியவர்க்கு அருளி அரவணைத் துயின்ற *
ஆழியான் அமர்ந்து உறை கோயில் **
கடி உடைக் கமலம் அடி இடை மலரக் *
கரும்பொடு பெருஞ்செந்நெல் அலைய *
வடிவுடை அன்னம் பெடையொடும் சேரும் *
வயல் வெள்ளியங்குடி அதுவே 9

** பண்டு முன் ஏனமாகி அன்று ஒருகால் *
பார் இடந்து எயிற்றினில் கொண்டு *
தெண்திரை வருடப் பாற்கடல் துயின்ற *
திருவெள்ளியங்குடியானை **
வண்டறை சோலை மங்கையர் தலைவன் *
மானவேல் கலியன் வாய் ஒலிகள் *
கொண்டிவை பாடும் தவம் உடையார்கள் *
ஆள்வர் இக்குரை கடல் உலகே 10

**அடிவரவு:** ஆய்ச்சி ஆநிரை கடு கறவை பாரினை காற்று ஒள்ளிய முடி குடி பண்டு அறிவது

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**